Better Health Channel



| **Child, family and relationship services** | **குழந்தை, குடும்பம் மற்றும் வாழ்க்கைத்துணை உறவு சேவைகள்** |
|---|---|
| For families in Victoria, there is a broad range of services to support and assist them, from parent education, to maternal and child healthcare, childcare, crisis support, child protection, family violence and relationship services. | பிள்ளை வளர்ப்புக் கல்வி, மகப்பேறு மற்றும் குழந்தைச் சுகாதாரக் கவனிப்பு, குழந்தைக் கவனிப்பு, நெருக்கடி நிலை உதவிகள், குழந்தைப் பாதுகாப்பு, குடும்ப வன்முறை மற்றும் வாழ்க்கைத்துணை உறவு போன்ற விடயங்களில் விக்டோரிய மாநிலத்திலுள்ள குடும்பங்களுக்கு உதவும் பல வகைப்பட்ட சேவைகள் உள்ளன. |
| Early parenting services offer support to parents from pregnancy through to a child turns four, helping with common difficulties such as feeding and sleeping problems, as well as more complex challenges. | கர்ப்ப நிலையிலிருந்து குழந்தைக்கு நான்கு வயது ஆகும் வரை பிள்ளை வளர்ப்பு விடயங்களில் பெற்றோர்களுக்கு உதவும் சேவைகள் உள்ளன. குழந்தைக்கு உணவூட்டுதல், நித்திரைப் பிரச்சினைகள் மற்றும் சில சிக்கலான விடயங்கள் போன்ற பொதுவான சிரமங்களில் உதவும் ஆரம்பகால குழந்தை வளர்ப்புச் சேவைகள் உள்ளன. |
| A range of specialist support, counselling, education, and advice services are provided through early parenting centres across Victoria. | பல வகைப்பட்ட சிறப்புதவிகள், அறிவுரையாலோசனை, கற்பிப்பு, மற்றும் அறிவுரையளிப்பு போன்ற சேவைகளும் உள்ளன. விக்டோரிய மாநிலமெங்கும் இந்தச் சேவைகள் 'ஆரம்பகாலப் பிள்ளைவளர்ப்பு உதவி மையங்கள்' மூலம் அளிக்கப்படுகின்றன. |
| We provide support and education to families who are experiencing some challenges within their lives, so we're working with families with children naught, or even pre-birth, through to four years of age, where we know brain development's really important, and we provide a range of services from day-stay, residential, home-visiting, to community education programs, to support young children. | தமது வாழ்க்கையில் சிரமங்களை எதிர்கொள்ளும் குடும்பத்தினருக்கு ஆதரவுதவி மற்றும் கல்வியறிவை நாங்கள் அளிக்கிறோம். ஆகவே, குழந்தைகள் உள்ள குடும்பங்களோடு இணைந்து நாங்கள் பணியாற்றுகிறோம் மற்றும், பிரசவத்திற்கு முன்பிருந்து குழந்தைக்கு நான்கு வயதாகும் வரையிலும் உதவுகிறோம். மூளை வளர்ச்சி என்பது குழந்தைக்கு மிக அவசியம். ஆகவே, குழந்தைகளுக்கு ஆதரவுதவியாகப் |



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

பகல்வேளைக் கவனிப்பு, தங்குமிடப் பராமரிப்பு, இல்ல வருகைகள் மற்றும் சமூகக் கல்வித் திட்டங்கள் ஆகிய சேவைகளை அளிக்கிறோம்.

Early parenting services are subsidised, and are designed to assist families needing to build their skills and confidence in caring for their infant or toddler.

ஆரம்பகாலக் குழந்தை வளர்ப்புச் சேவைகளுக்குத் தள்ளுபடிகள் உண்டு, மற்றும் தமது குழந்தைகளை வளர்ப்பதற்கான தன்னம்பிக்கயையும் திறன்களையும் வளர்த்துக்கொள்ள விரும்பும் குடும்பங்களுக்கு ஒத்தாசை செய்வதற்காக இந்தச் சேவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

We're dealing with far more complexity with the family, and really looking at attachment and attunement, relationships within the family dynamics, to ensure the best outcomes for the infants and toddlers that we're dealing with.

குடும்பத்தினருக்கும், வாழ்க்கைத்துணைகளுக்கும் இடையேயுள்ள உறவுகளின் மீது கவனம் செலுத்தி அவர்களுக்கு இடையே பிணைப்பையும் ஒற்றுமையையும் வளர்க்க நாங்கள் முயற்சிக்கிறோம். இதன் மூலம் எங்களது கவனிப்பில் உள்ள குழந்தைகளுக்கு நல்ல பலன்கள் கிடைப்பதை எம்மால் உறுதி செய்ய இயலும்.

Victoria's maternal and child health services monitor the health and development of your baby or toddler.

விக்டோரிய மாநிலத்தின் மகப்பேறு மற்றும் குழந்தைச் சுகாதாரச் சேவைகள் உங்களது குழந்தையின் உடல்நலம் மற்றும் வளர்ச்சியைக் கண்காணித்துவரும்.

They provide 10 consultations, can provide referrals to healthcare professionals if needed, and can link you with other local families and community services.

10 கலந்துரையாடல்களையும், தேவைப்பட்டால் உடல்நலக் கவனிப்புத் தொழிலர்களைப் பார்ப்பதற்கான பரிந்துரைகளையும் இவர்கள் வழங்குவர். தேவைப்பட்டால் உள்ளூர்ப் பகுதியிலுள்ள 'குடும்ப மற்றும் சமூகச் சேவைக'ளுடன் தொடர்பு ஏற்படுத்தித் தருவார்கள்.



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

The Maternal Child Health line is a 24 hour telephone line staffed by qualified nurses, with information, support, and guidance regarding child health, nutrition, breastfeeding, maternal and family health, and parenting.

'மகப்பேறு மற்றும் குழந்தைச் சுகாதாரத் தொலைபேசி இணைப்பு' 24 மணி நேரச் சேவையாகும். தகுதி பெற்ற தாதிகள் உள்ள இந்தச் சேவையானது தேவைப்படும் தகவல்களையும், ஆதரவுதவியையும் உங்களுக்கு அளிக்கும். மேலும், குழந்தை நலம், போஷாக்கு, தாய்ப்பாலூட்டல், குழந்தை வளர்ப்புப் போன்ற விடயங்களில் உங்களுக்கு வழிகாட்டும்.

Children and family services are inclusive of all cultures, however, there are also family and parenting services specifically designed for Aboriginal and Torres Strait Islander families.

குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்குமான சேவைகள் அனைத்துக் கலாசாரங்களையும் மதிக்கும், இருப்பினும், அபோரிஜினி மற்றும் டோரிஸ் நீர்ச்சந்தித் தீவகக் குடும்பங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட குடும்ப சேவைகளும் குழந்தை வளர்ப்பு சேவைகளும் உள்ளன.

It's not just about the antenatal care, it could be around housing, financial counselling, mental health, so a range of issues, and we also provide transport, which is an essential part of the KMS Program.  And you can't get that in mainstream, so that's a major barrier to people attending the services here.

எமது சேவை முன் பிரசவக் கவனிப்பைப் பற்றியது மட்டுமல்ல, வீட்டுவசதி, நிதிநிலை ஆலோசனை, மன நலம் போன்ற பல பிரச்சினைகளுக்கான சேவைகளாகவும் இருக்கலாம். மேலும், 'KMS திட்ட'த்தின் முக்கிய அங்கமான போக்குவரத்து வசதியையும் நாங்கள் அளிக்கிறோம். பிரதானமான பொதுச் சேவைகளில் இந்த வசதி இல்லை, ஆகவே இந்தச் சேவைகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு இந்த வசதி இல்லாதது ஒரு தடையாக இருக்கிறது.

Childcare services provide care and support for working families.

வேலைக்குச் செல்பவர்கள் உள்ள குடும்பங்களுக்கு உதவும் வகையில் குழந்தைக் கவனிப்புச் சேவைகள் பராமரிப்பு அளிக்கின்றன.

Finding the right childcare arrangement will depend on the length of care you need, your child's age, and the type of care you think would suit your child.

குழந்தைக் கவனிப்பு தேவைப்படும் நேரம், உங்கள் குழந்தையின் வயது, உங்கள் குழந்தைக்கு ஏற்ற கவனிப்பின் வகை ஆகியவற்றைப் பொறுத்துச் சரியான



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

| | |
|---|---|
| | குழந்தைக் கவனிப்பு வசதியைத் தேடுவது அமையும். |
| The cost of childcare depends on the type of service you choose. | நீங்கள் தெரிவு செய்யும் சேவையின் வகையைப் பொறுத்து குழந்தைக் கவனிப்பிற்கு ஆகும் செலவு இருக்கும். |
| You may be eligible for financial assistance from the Commonwealth government. | மத்திய பொதுநல அரசின் நிதியுதவியைப் பெற நீங்கள் தகுதி பெறக்கூடும். |
| Contact the Department of Human Services. | 'மானிடச் சேவைகள் திணைக்கள'த்துடன் தொடர்புகொள்ளுங்கள். |
| As families grow and children become young adults, additional services are ready at hand across Victoria. | குழந்தைகள் வளர்ந்து இளைஞர்களாகி குடும்பம் பெரிதாகும்போது உங்களுக்கு உதவத் தயாராக இருக்கும் கூடுதல் சேவைகள் விக்டோரிய மாநிலம் எங்கும் உள்ளன. |
| Many are subsidised by the government, including services for mental health and dental health, as well as other allied health services, such as physiotherapy, psychology, and dietary advice. | மனநலச் சேவைகள், பல்நலச் சேவைகள், உடலியக்கச் சிகிச்சை, உளவியல் மற்றும் உணவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய இதர சுகாதாரச் சேவைகளுக்கு அரசாங்கத்தின் தள்ளுபடி உண்டு. |
| For information on a range of dental services, information on the child dental benefit schedule, or to find a community dental clinic, contact Dental Health Services Victoria. | பல வகைப்பட்ட பல் மருத்துவச் சேவைகள், குழந்தைகளுக்கான பல் மருத்துவச் சேவைத் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைப் பெறவும், அல்லது சமூக பல் மருத்துவ நிலையங்களைப் பற்றிய தகவல்களைப் பெறவும் 'விக்டோரிய பல் மருத்துவச் சேவை'யுடன் தொடர்பு கொள்ளுங்கள். |
| As young people move into adulthood, mental health or alcohol and drugs issues may occur. | இளம் வயதினர் வளர்ந்து வயதுவந்தவர்களாக ஆகும்போது மன நலப் பிரச்சினைகள் அல்லது மது மற்றும் போதைவஸ்துப் பிரச்சினைகள் எழலாம். |



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

| | |
|---|---|
| Finding someone to talk to as early as possible is important. | இதைப் பற்றிப் பேசுவதற்கு ஏற்ற ஒரு சேவையை கூடிய விரைவில் கண்டுபிடிப்பது முக்கியம். |
| Starting with family is a good place, or talk to your doctor or contact a confidential phoneline or online service. | முதலில் குடும்பத்தினருடன் பேசுவது நல்லது, அல்லது உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள், அல்லது இரகசியத் தொலைபேசிச் சேவை அல்லது இணையச் சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள். |
| These services are free, and expert counsellors can provide valuable advice and counselling.  In times of urgent family crisis, there are emergency services to assist you. | இந்தச் சேவைகள் இலவசமானவை, மேலும் கைதேர்ந்த அறிவுரையாலோசகர்களால் இதைப் பற்றி அறிவுரைக்க இயலும். அவசரமான குடும்ப நெருக்கடிகள் ஏற்படும் சமயங்களில் உங்களுக்கு உதவுவதற்கென அவசரகாலச் சேவைகள் உள்ளன. |
| In an emergency, always call 000. | எப்போதும், அவசரநிலை ஒன்றில் '000' - வை அழையுங்கள். |
| If you or someone in your family is thinking about self-harm or suicide, call Lifeline, on 13 11 14. | நீங்களோ அல்லது உங்களுடைய குடும்பத்திலுள்ள ஒருவரோ சுய தீங்கு அல்லது தற்கொலையைப் பற்றிய எண்ணத்தில் இருந்தால் 13 11 14 எனும் இலக்கத்தில் 'உயிரிணைப்'பை (Lifeline) அழையுங்கள். |
| If you are concerned about the safety and risk of harm to a child, contact your local child protection service. | ஒரு குழந்தைக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இருந்து அதன் பாதுகாப்பைப் பற்றி நீங்கள் கரிசனப்பட்டால் உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள குழந்தைப் பாதுகாப்புச் சேவையினை அழையுங்கள். |
| Phone numbers are available at BETTERHEALTH.vic.gov.au/childprotection. | betterhealth.vic.gov.au/childprotection எனும் வலைத்தளத்தில் தொலைபேசி இலக்கங்கள் கிடைக்கும். |



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

If you are worried about the immediate safety and risk of harm to a child, that cannot safely be left until the next working day, call the After Hours Child Protection Emergency Service on 13 12 78.

அடுத்த வேலை நாள் வரைக்கும் ஒரு குழந்தையைத் தனியாக விட இயலாது என்ற நிலையில் குழந்தையின் உடனடிப் பாதுகாப்பைப் பற்றி நீங்கள் கரிசனப்பட்டால், வேலை நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரக் குழந்தைப் பாதுகாப்பு அவசர சேவையை 13 12 78 - இல் அழையுங்கள்.

Child FIRST ensures that vulnerable children, young people, and their families, are linked to relevant services.

பாதிப்புறும் நிலையிலுள்ள குழந்தைகள், இளம் பிராயத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்குத் தகுந்த சேவைகளுடன் தொடர்பு ஏற்படுத்தித் தரப்படுவதை 'Child FIRST' எனும் சேவை உறுதிப்படுத்துகிறது.

Visit the Department of Human Services website for more information and your local services

இதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும், உங்களது உள்ளூர்ப் பகுதியில் இருக்கும் சேவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் 'மானிடச் சேவைகள் திணைக்கள'த்திற்குச் செல்லுங்கள்.

Asylum-seekers and refugees in Victoria, including children, are able to access most health and community services funded by the Victorian government, as eligibility for most services is not determined by visa or residency status.

குழந்தைகள் உள்ளடங்க, விக்டோரிய மாநிலத்திலுள்ள அடைக்கலம் நாடுவோர்களும் அகதிகளும் விக்டோரிய அரசினால் நிதியுதவியளிக்கப்படும் சேவைகளை அணுகலாம், ஏனெனில் விசா மற்றும் குடிவரவு நிலையை வைத்து இதற்கான தகுதி தீர்மானிக்கப்படுவதில்லை.

These services include community health services, the refugee health program, torture, and trauma counselling, and the catch-up immunisation program.

சமூகச் சுகாதாரச் சேவைகள், அகதிகள் சுகாதாரத் திட்டம், சித்திரவதை மற்றும் அதிர்ச்சிக்கு ஆளானோருக்கான அறிவுரையாலோசனை, விட்டுப்போன தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதற்கான திட்டம் ஆகியன இந்த சேவைகளில் உள்ளடங்கும்.

All families have different needs.

ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகளும்



Child, family and relationship services © Copyright State of Victoria 2017

| | |
|---|---|
| | வெவ்வேறு மாதிரியாக இருக்கும். |
| At times, for some, they can be urgent, while for others, longer-term help is needed. | சில வேளைகளில் சிலருக்கு உதவி அவசரமாகத் தேவைப்படும், சிலருக்கு நீண்ட கால உதவி தேவைப்படும். |
| The Victorian health system offers a range of services to meet these needs. | இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் விக்டோரிய மாநிலம் பல வகைப்பட்ட சேவைகளை அளிக்கிறது. |
| For more information, visit: BETTERHEALTH.vic.gov.au/family | மேலதிகத் தகவல்களுக்கு: BETTERHEALTH.vic.gov.au/family |



Child, family and relationship services © Copyright State of Victoria 2017